பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

**04 09 2026** **FRIDAY** **7.15 PM**

ஆகாஷவாணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் வளர்ச்சிக்கு இளையோரின் பங்கு முக்கியமானது என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

2. விண்வெளித்துறையில் இந்தியா — பிரான்ஸ் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டு அமைச்சர் பேராசிரியர் **Philippe Baptiste**-வுடன், மத்திய இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் பேச்சு நடத்தியுள்ளார்.

3. பிரிக்ஸ் நாடுகளின் தலைமை நீதிபதிகளுடன் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சூரியகாந்த் இன்று ஆலோசனை நடத்தினார்.

4. பீகார், மத்தியப்பிரதேசம் மாநிலங்களில் கனமழையால் பல மாவட்டங்களில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

5. **Almaty** டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Syndrela Dass — Sutirtha Mukherjee** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது

- இனி விரிவான செய்திகள் - -

<<<<<<>>>>>

நாட்டின் வளர்ச்சிக்கு இளையோரின் பங்கு முக்கியமானது என்று குடியரசு துணைத்தலைவர் திரு சி பி ராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சண்டிகரில் உள்ள பஞ்சாப் பல்கலைக்கழகத்தில் அறிவியல் ஆய்வுகளுக்கான நவீன பகுப்பாய்வு கருவியை தொடங்கிவைத்து பேசிய அவர், போதைப்பொருள் பழக்கத்திற்கு இளைஞர்கள் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது என்றும் வலியுறுத்தினார்.

மாணவர்களின் பாதுகாப்புக்கு கல்வி நிறுவனங்கள் உயர் முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

143 ஆண்டுகளாக சிறப்பாக செயல்பட்டுவரும் பஞ்சாப் பல்கலைக்கழகத்திற்கு 80 சதவீத நிதியை மத்திய அரசு வழங்கி வருவதாகவும், இதனால் இப்பல்கலைக்கழகம் மத்திய பல்கலைக்கழகத்திற்கு இணையாக உள்ளது என்றும் திரு சி பி ராதாகிருஷ்ணன் கூறினார்.

உயிரியல், வேதியியல், இயற்பியல் மற்றும் பொறியியல் படிப்புகளில் ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வுக்கு இந்த கருவி பெரிதும் உதவிடும்.

இப்பல்கலைக்கழகத்தின் மூலம் மேற்கொள்ளப்படும் புத்தாக்க தொழில்கள் மற்றும் ஆராய்ச்சி கட்டமைப்பை இந்த புதிய தொழில்நுட்பம் வலுப்படுத்தும்.

<<<<<<>>>>>

இத்தாலி பிரதமர் திருமதி **Giorgia Meloni,** தமக்கு வாழ்த்து தெரிவித்த பிரதமர் திரு நரேந்திர மோடிக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இந்தியா — இத்தாலி இடையிலான நீண்டநாள் நட்புறவை வளர்க்க இணைந்து செயல்படுவோம் என்று கூறியுள்ளார்.

இந்திய மத்தியக்கிழக்கு ஐரோப்பிய பொருளாதார மண்டலத்தின் வளர்ச்சிக்காகவும், இந்தியாவும்,ஷ இத்தாலியும் பாடுபடும் என்றும் திருமதி **Giorgia Meloni** தெரிவித்துள்ளார்.

முன்னதாக, பிரதமர் திரு நரேந்திர மோடி, சுதந்திர இத்தாலியின் நீண்டநாள் பிரதமராக சாதனை படைத்த திருமதி **Giorgia Meloni-க்கு** தமது வாழ்த்துகளை தெரிவித்திருந்தார்.

<<<<<<>>>>>

விண்வெளித்துறையில் இந்தியா — பிரான்ஸ் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து மத்திய விண்வெளித்துறை இணையமைச்சர்

டாக்டர் ஜிதேந்திர சிங், பிரான்ஸ் அமைச்சர் பேராசிரியர் **Philippe Baptiste** -வுடன் காணொலி வாயிலாக பேச்சு நடத்தினார்.

மனிதனை விண்வெளிக்கு அனுப்புவது, நவீன விண்வெளி தொழில்நுட்பங்கள், விண்வெளி நிறுவனங்கள் மற்றும் விண்வெளி கட்டமைப்பு தொழில் நிறுவனங்களை ஆக்கப்பூர்வமாக பயன்படுத்துவது குறித்தும் இரு அமைச்சர்களும் ஆய்வு மேற்கொண்டனர்.

பாரிசில் நடைபெறும் சர்வதேச விண்வெளி உச்சி மாநாட்டில் இந்தியா பங்கேற்பது குறித்தும், பெங்களூருவில் நடைபெறவுள்ள விண்வெளி கண்காட்சியில் பிரான்ஸ் பங்கேற்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது.

சர்வதேச விண்வெளி உச்சி மாநாட்டில் இந்தியா பங்கேற்கும் என்று டாக்டர் ஜிதேந்திர சிங் உறுதியளித்தார்.

விண்வெளி தொடர்பான அறிவியல் தரவுகளை ஒருங்கிணைப்பது உள்ளிட்டவை குறித்து உச்சிமாநாட்டில் விவாதிக்கப்படுவதை இந்தியா வரவேற்பதாகவும் அவர் தெரிவித்தார்.

விண்வெளித்துறையில் இந்தியா — பிரான்ஸ் ஒத்துழைப்பை வலுப்படுத்த பிரான்ஸ் மிகுந்த ஆர்வம் கொண்டுள்ளதாக அந்நாட்டு அமைச்சர் பேராசிரியர் **Philippe Baptiste** கூறினார்.

<<<<<<>>>>>

சிவில் விமான போக்குவரத்துறையில் பெல்ஜியம் நாட்டுடனான ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்து அந்நாட்டு பிரதமர் திரு **Bart De Wever**-வுடன், மத்திய அமைச்சர் திரு ராம்மோகன் நாயுடு பேச்சு நடத்தியுள்ளார்.

இதுதொடர்பாக, திரு ராம்மோகன் நாயுடு வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், இருநாடுகளுக்கும் இடையே நேரடி விமான போக்குவரத்து சேவையை விரிவுபடுத்துவது, சரக்கு விமானங்கள் மூலம் மருந்துப் பொருட்களை கொண்டுசெல்வது உள்ளிட்ட முக்கிய விஷயங்கள் குறித்து தாம் ஆலோசித்ததாக கூறியுள்ளார்.

இந்தியா — பெல்ஜியம் இடையிலான வர்த்தகம் மற்றும் முதலீட்டுக்கான வாய்ப்புகள் குறித்தும் அந்நாட்டு பிரதமருடன் ஆலோசித்ததாக திரு ராம்மோகன் நாயுடு தெரிவித்துள்ளார்.

<<<<<<>>>>>

தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் நாடு முழுவதும் மேற்கொண்ட மீட்பு மற்றும் மறுவாழ்வு

இயக்கப்பணியின்போது **3** ஆயிரத்து **800**-க்கும் மேற்பட்ட குழந்தை தொழிலாளர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

குழந்தை தொழிலாளர்களை பணியமர்த்திய நிறுவனங்கள் மற்றும் தனிநபர்கள் மீது **575** வழக்குகள் பதிவு செய்யப்பட்டதாகவும் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஜூன் மாதம் **12**-ஆம் தேதிமுதல், ஆகஸ்ட் **31**-ஆம் தேதிவரை அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகள் மாவட்ட ஆட்சியர்கள், தொழிலாளர் நலத்துறையினர், காவல்துறையினர் ஆகியோருடன் இணைந்து, இப்பணிகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குழந்தை தொழிலாளர் முறையை முற்றிலுமாக ஒழிக்க தீவிர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், தேசிய குழந்தை உரிமைகள் ஆணையத்தின் மூலம், குழந்தை தொழிலாளர் குறித்த விழிப்புணர்வு மற்றும் அவர்களை மீட்டு கல்வி கற்க செய்வதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருவதாக தெரிவித்துள்ளது.

<<<<<<>>>>>

பிரிக்ஸ் நாடுகளின் தலைமை நீதிபதிகளின் மூன்று நாள் கூட்டம் இன்று புதுதில்லியில் தொடங்கியது.

உறுப்பு நாடுகளின் தலைமை நீதிபதிகளுடன் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு சூரியகாந்த், இருதரப்பு ஆலோசனை நடத்தினார்.

ரஷ்யா, சீனா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், தென்னாப்பிரிக்கா, ஈரான், உஸ்பெகிஸ்தான் நாடுகளின் தலைமை நீதிபதிகள் இந்த கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

நீதித்துறையில் ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும், தொழில்நுட்பத்தை ஒருங்கிணைத்து விரைந்து நீதி வழங்குவது குறித்தும் இக்கூட்டத்தில் ஆய்வு செய்யப்பட்டது.

மக்களுக்கு இடையிலான தொடர்புகளை மேம்படுத்துவது, சிறந்த சட்ட நடைமுறைகளை பின்பற்றுவது உள்ளிட்டவை குறித்தும் ஆய்வு செய்யப்பட்டது.

<<<<<<>>>>>

ஜம்மு காஷ்மீரின் பட்காம் மாவட்டத்தில் உள்ள வனப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையின்போது ஒரு

தீவிரவாதி சுட்டுக்கொல்லப்பட்டதாக பாதுகாப்புத்துறை செய்தித்தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்திய ராணுவம், மத்திய ரிசர்வ் காவல் படையினர் மற்றும் கஷ்மீர் காவல்படையினர் இணைந்து இந்த தேடுதல் வேட்டையை மேற்கொண்டனர்.

புலனாய்வு தகவல்களின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட இந்த தேடுதல் வேட்டையின்போது பதுங்கியிருந்த தீவிரவாதி பாதுகாப்புப்படையினரை நோக்கி துப்பாக்கியால் சுட முயன்றார். அப்போது நடத்தப்பட்ட பதில் தாக்குதலில் தீவிரவாதி சுட்டுக்கொல்லப்பட்டதாக பாதுகாப்புத்துறை செய்தித்தொடர்பாளர் கூறியுள்ளார்.

உயிரிழந்த தீவிரவாதியிடமிருந்து ஏ-கே ரக துப்பாக்கி மற்றும் பல ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

தொடர்ந்து பட்காம் மாவட்ட வனப்பகுதியில் பாதுகாப்புப் படையினர் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

<<<<<<>>>>>

பீகார் மாநிலத்தில் 16 மாவட்டங்கள் கடும் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

அம்மாநிலத்தில் பாயும் கங்கை, கோசி **Gandak** உள்ளிட்ட பத்து முக்கிய ஆறுகளில் கடும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கங்கை உள்ளிட்ட எட்டு ஆறுகளில் அபாய கட்டத்தை தாண்டி வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளதாகவும், பாட்னாவில் வெள்ளப்பெருக்கு காரணமாக வெள்ள தடுப்புச்சுவர் மூடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாழ்வான பகுதிகளில் வெள்ளநீர் புகுந்துள்ளதால் கிராமப்பகுதிகளில் சாலை போக்குவரத்து துண்டிக்கப்பட்டுள்ளன.

நாலந்தா மற்றும் பாட்னா மாவட்டங்களில் நூற்றுக்கணக்கான ஏக்கர் நிலம் வெள்ளநீரில் மூழ்கியுள்ளன.

பேரிடர் மீட்புப் படையினர் பாட்னா உள்ளிட்ட எட்டு மாவட்டங்களில் வெள்ள அபாய எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளை முதலமைச்சர் திரு சாம்ராட் சௌத்ரி இன்று பார்வையிட்டார்.

மத்தியப்பிரதேசத்திலும் கனமழை காரணமாக பல இடங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

அடுத்த இரண்டு நாட்களில் இம்மாநிலத்தின் பல இடங்களில் கன மற்றும் மிக கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது.

சித்திரக்கூட்டில் உள்ள மந்தாகினி ஆற்றில் வெள்ளம் அபாயக்கட்டத்தை நெருங்கியுள்ளது.

இதனையடுத்து, நூற்றுக்கணக்கான மக்கள் வேறு இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

**Mandla** மாவட்டத்தில் பாயும் நர்மதா ஆற்றிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

ஜபல்பூரில் உள்ள **Bargi** அணை முழு கொள்ளளவை எட்டியுள்ளதையடுத்து, பாதுகாப்பு கருதி அணையின் ஐந்து மதகுகளும் திறந்துவிடப்பட்டுள்ளன.

<<<<<<>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

**Almaty** டேபிள் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Syndrela Dass — Sutirtha Mukherjee** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

மகளிர் இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, **11-5, 11-3, 10-12, 11-7** என்ற செட் கணக்கில், கஜகஸ்தானின் **Darya Fu — Mariya Lukyanova** இணையை வென்றது.

இப்போட்டியின் மற்றொரு ஆட்டத்தில் **Diya Chitale — Yashaswini Ghorpade** இணையும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

-------------

தாய்லாந்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Maan Kesharwani — Manish Sureshkumar** இணை இறுதியாட்டத்திற்கு முன்னேறியுள்ளது.

ஆடவர் இரட்டையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் இந்த இணை **6-4, 4-6, 10-3** என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Tomohiro — Daisuke** இணையை வென்றது.

---------------

எகிப்தில் நடைபெற்றுவரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Dev Javia** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், **6-1, 6-2** என்ற செட் கணக்கில் ஸ்லோவேக்கியாவின் **Michal Krajci**-ஐ வென்றார்.

மற்றொரு ஆட்டத்தில் **Chirag Duhan**-னும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

----------------

இந்தோனேஷிய மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Anmol Kharb** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், **21-14, 13-21, 21-17** என்ற செட் கணக்கில், தைவானின் **Ching Ping-** ஐ வென்றார்.

**<<<<<<END>>>>>**